# அறிவிக்கை

அவசரகால 108 ஆம்புலன்ஸ் சேவையில் மருத்துவ உதவியாளர் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு முகாம் வரும் வெள்ளிக்கிழமை (டிச.24) நடைபெறவுள்ளது.

இதுகுறித்து ஜி.வி.கே. - இம்.எம்.ஆர்.ஐ. நிறுவனம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: இப்பணிக்குச் சேர பிஎஸ்சி நர்சிங், டிஜிஎன்எம், பிஎஸ்சி விலங்கியல், தாவரவியல், நுண் உயிரியல், உயிரி வேதியியல், உயிரி தொழில்நுட்பவியல் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று அல்லது பிளஸ் 2-வுக்குப் பிறகு ஏஎன்எம், டிஎஃப்பிஎன், டிஎன்ஏ, டிஎம்எல்டி, டி.பார்ம் ஆகியவற்றை நிறைவு செய்திருத்தல் அவசியம். இலகு ரக வாகன ஓட்டுநர் உரிமம் மற்றும் பேட்ஜ் வாகன உரிமம் வைத்துள்ள 24 - 35 வயதுக்குட்பட்டவர்கள் பணியில் சேரலாம். ஓட்டுநர் உரிமம் பெற்று குறைந்தது மூன்று ஆண்டுகளும், பேட்ஜ் உரிமம் பெற்று ஓராண்டும் நிறைவு செய்திருத்தல் அவசியம்.

**எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை வளாகத்தில்** வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் நேர்முகத் தேர்வில் சான்றிதழ்களுடன் பங்கேற்கலாம். கூடுதல் விவரங்களுக்கு **91541 89354, 91541 89425** ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.